[1978 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

(முற்பகல் 10-00)

(மாண்புமிகு உறுப்பினர்கள் மு. அம்பிகாபதி, மீ. வின்சென்ட், இரெ. இராசமாணிக்கம் எழுந்து நின்றார்கள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள் தினமும் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று அத்தனை பேரும் எழுந்து நின்றால் நான் என்ன செய்வது. தயவு செய்து உட்காருங்கள்.

(2) தகவல் கோரல்.

(அ) உறுப்பினர் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளாதது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துப்புரவுப் பணியாளர்களின் உண்ணாவிரதம் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதை எடுத்துக் கொள்வது பற்றி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் அதைக் குறிப் பேட்டிலே ஏற்ற வேண்டும் என்று விரும்பினாலும் அல்லது அந்த விருப்பத்தோடு பேசினாலும் சரி, இந்த அவையிலே இருக்கிற விதி முறைகள் அதை அனுமதிக்கவில்லை. அறையிலே வந்து கேளுங்கள். தங்களுடைய கோரிக்கையை அறையிலே வந்து கேட்டால் விவாதிக்கப்படும்.

(3) ஒழுங்குப்பிரச்சினைகள்

(அ) சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் அரசியல் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டுவது குறித்து.

திரு. மீ. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் அரசியல் கட்சிகளின் கூட்டத்தை கூட்டலாமா என்ற ஒரு ஒழுங்குப் பிரச்சினையை தலைவர் முன் கொண்டுவருகிறேன்.

''30-3-1978 நாளிட்ட முரசொலியில் 'தலைவர் கலைஞர் தலைமையில் சென்னை மாவட்ட தி.மு.கழக செயல் வீரர்கள் கூட்டம். பேராசிரியர், சாதிக், ப.உ.ச. பங்கேற்பு' என்ற தலைப்பில் மாவட்டச் செயலாளர் ஒருவர் ஒரு அறிவிப்பு கொடுத்திருக்கிறார். சென்னை மாவட்டத்தின், தி.மு.கழகச் செயல் வீரர்கள் கூட்டம் 30-3-1978 வியாழன் மாலை 6 மணிக்கு அண்ணாசாலை சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெறும்.